4 அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. மீதமுள்ள மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதமும், வாக்கெடுப்பும், சில மாற்றங்கள்.

இன்று
25—3—1978 மாலை 18. மருத்துவம்,
19. பொதுச்சுகாதாரம்

ஆகியவற்றிற்கான முதல் அமைச்சர் அவர்களின் பதிலுரையும், வாக்கெடுப்பும் நடைபெறும். அதற்குப் பின்னாலே, எண். 7. மாநில சட்ட மன்றம் பற்றி இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாநில சட்ட மன்றத் துறையின் மீது விவாதம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறதா? அல்லது இரவு 10 மணி வரை இருந்து அதன் மீது விவாதமும், வாக்கெடுப்பும் எடுத்து முடிக்கப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று மாலை முதல் அமைச்சர் அவர்களின் பதிலுரையும், வாக்கெடுப்பும் முடிந்த பிறகு, கண்டிப்பாக மாநில சட்ட மன்றத் துறை பற்றி எடுத்துக் கொள்ளப்படும்.

26—3—1978
(ஞாயிற்றுக்கிழமை) .. விடுமுறை

27—3—1978 .. 21. மீனளம
(திங்கட்கிழமை) 35. நுகர் பொருள் வழங்கல்.
57. பல் வகை மூலதனச்செலவு.

28—3—1978 8 தேர்தல்கள்.
(செவ்வாய்க்கிழமை) 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

அதன் பின்

மாலே ..	6	பத்திரப் பதிவு.	
	23	கூட்டுறவு.	
	25	சின்கோனு.	
	45	காட்டுவளத் துறை.	
	56	காட்டுவள மூலதனச் செலவு.	
29—3—1978 புதன்கிழமை	12	இந்து சமய அறநிலையக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.	
மாலே 1-00 மணி	41	இயற்கையின் சீற்றங்கள் குறித்து	விவாதமின்றி வாக்கெடுப்பு
	42	பென்ஷன்.	
	43	மிஸலேனியஸ்.	
	46	இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.	
	48	ஜமீன்தார்கள் இழப்பீடு.	
		நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவுகள் அறிமுகம்.	
30—3—1978 (வியாழக்கிழமை)		நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவுகளின் மேல் விவாதம்.	

மற்ற நாட்களில் மாற்றமில்லே.

பேரவையின் இன்றைய காலே அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, இன்று பிற்பகல் 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 25] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் பேரவை மாலை 4 மணி அளவில் மீண்டும் கூடியது.

3. 1978-79ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)—

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்—சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களின் நலனுக்காக நோய் வராமல் தடுக்கவும், வந்த நோயைப் போக்கவும் நல்ல பணி செய்வதற்காக தொண்டு செய்கின்ற ஒரு அமைப் பாக மருத்துவம், பொதுநலம், தியாகம், சீர்மை, திறமை இவைகளை உள்ளடக்கி மருத்துவர்கள் தங்களுடைய அரிய தொண்டின் மூலம் நாட்டிலே உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு, ஒருசிலரே என்று சொல்லுகிற அளவுக்கு எண்ணிக்கையிலுள்ளவர்கள், நிதிப் பற்றாக்குறை நிலையில், வசதியின்மை நிறைந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்க ளுடைய உழைப்பால் மக்களை வாழ வைக்க முயலுகின்ற ஒரு அமைப்பு மருத்துவத் துறை என்று சொல்ல நான் விரும்புகிறேன்.

மருத்துவத் துறை பல்வேறு பிரிவுகளை, பல்வேறு எண்ணங்களின் எதிரொலிகளை உள்ளடக்கி நாட்டு மக்க ளுடைய நல்வாழ்விற்காக செயல்படுத்துகிற, ஆற்றலும் அறிவும் பெற்றவர்களின் நல்லதொரு கூட்டமைப்பாகும் என்று நான் அதை இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே தங்கள் தொகுதி யிலும், தங்கள் பகுதியிலும் உள்ள வசதியின்மையை, அதாவது மருத்துவர்கள் போதாது என்கிற குறையும், மருத்துவர்கள் இருந்தால் மருந்து இல்லை என்ற நிலையும், மருந்தும் மருத்துவர்களும் இருக்கக்கூடிய நிலைமை இருந் தால் கட்டிடம் இல்லையென்ற நிலையும், இவை அத்தனையும் இருந்தால் சீராகப் பணியாற்றுவதில்லை என்கின்ற குறையும், இப்படி விரிவாக எடுத்துச் சொல்லி தங்களது கடமை உணர்வுகளைச் செயலாக்குவதற்காக, இங்கே அரசைத் தூண்டி விடுபவர்களாக, நன்றாக எரியும் விளக்கில் எண்ணெய் இருந்தாலும் திரியைத் தூண்டி விடுவது போல், எங்கள் உள்ளத்தில் நல்லெண்ணம் இருந்தாலும், நல்வாழ்வுக்கு மக்களுக்குத் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்ற ஆர்வம்